**நூலகத்தின் வருமானம் - 2013**

| **வருமானம்** | **ரூபாய்கள் (ரூ.)** |
|---|---|
| போட்டோப் பிரதி சேவை | 1,239.00 |
| நூலகத் தண்டப் பணம் | 14,351.00 |
| தொலைந்த நூல்கள் தொடர்பான அறவீடுகள் | 371.88 |
| மொத்தம் | 15,962.38 |

## 11. 2013 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் அபிவிருத்தியும் அடைவுகளும்

- 2013 ஆம் ஆண்டளவில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் கிட்டத்தட்ட ஐயாயிரத்து இருநூற்று இருபத்தேழு (5227) தகைமைபெற்ற சான்றிதழ்தாரிகளை 05 வகைகளில் உருவாக்கியிருக்கின்றது.இதுஎழுபத்தைந்து (75) முதுமாணிப் பட்டதாரிகள்,நூற்றுப் ஐம்பத்தி மூன்று (153) பட்டதாரிகள்,நூறு(100) நிறைவேற்று டிப்ளோமாதாரிகள்,நூற்று ஐம்பத்தாறு (156) டிப்ளோமாதாரிகள் மற்றும் நான்காயிரத்து எழுநூற்று நாற்பத்து (4743) சான்றிதழ்தாரிகளை உள்ளடக்குகின்றது.

- **பாடசாலையை விட்டு விலகியோருக்கான ஆங்கில மொழி குறுகிய கால கற்கைநெறி இல. 01 ஆரம்பிக்கப்பட்டது.**
  இந்த நிகழ்ச்சி பாடசாலை விட்டு விலகியோர் மற்றும் தொழில் தேடுவோருக்கானஇலக்காக இருந்தது. இந்த நிகழ்ச்சி 25 நவம்பர் 2013 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் 60 மாணவர்கள் கற்கைநெறிக்குப் பதிவுசெய்யப்பட்டனர்.

- 2013 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனம் 04CCNA கற்றைநெறிகளையும் 03 மைக்குறோசொப்ட் கற்கைநெறிகளையும் நாட்டிற்கு அறிமுகப்படுத்தியது. இந்த நிகழ்ச்சிகள் கணினி விஞ்ஞானத்துறையில் உலகளாவிய அங்கீகாரம்பெற்ற தகைமைகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் மாணவர்களுக்கான இலக்காக இருக்கின்றன. இந்த நிகழ்ச்சிகள் CISCO கணினிக் கட்டமைப்பு மற்றும் Microsoft கலாசாலையின் கூட்டுழைப்புடன் நடாத்தப்படுகின்றது.

- ஒறியன்ட் கலாசாலையின் கூட்டுழைப்புடன் தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவத்தில் டிப்புளோமா நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

- "விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத்திற்கான சமாதானம் மற்றும் அபிவிருத்தி"என்ற தொனிப் பொருளில் சர்வதேச மாநாடு வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

- விக்கிரமாராட்சி ஒப்டிகலின் நன்கொடையுடன் கேட்போர் கூடம் புதுப்பிக்கப்பட்டது.

*****************************

## 12 நிதிச் செயற்பாடுகள்

2013 ஆம் ஆண்டிற்கான மொத்த அரசாங்க மானியம் ரூபா 32 மில்லியன் ஆருந்ததுடன் நிறுவகத்தினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் ரூபா 150 மில்லியனாக இருந்தது.

**2013 ஆம் ஆண்டு இறுதிக் கணக்குகளின் பிரதானவியடங்கள்**

| வருமானம் × ரூ. 1,000 | | | செலவினம் × ரூ. 1,000 | | |
|---|---|---|---|---|---|
| 01 | அரசமானியம் - மீண்டும் வரும் | 32,403 | 01 | வேதனங்கள் - கல்விசார் | 8,800 |
| 02 | அரசமானியம் - மூலதனம் | 12,000 | 02 | வேதனங்கள் - கல்விசாரா | 13,567 |
| 03 | அரசதகவல் தொழில்நுட்பமானியம் | - | 03 | வருகைதரும் விரிவுரையாளர்கள் | 1,045 |
| 04 | விரிவாக்கப் கற்கைநெறிகள் - வருமானம் | 150,251 | 04 | ஒப்பந்தசேவைகள் | 3,029 |
| 05 | ஏனைய உழைப்புகள் (மீ.வ. செல. ஆக) | 15,694 | 05 | பராமரிப்புச் செல்வினங்கள் | 1,179 |
| 06 | ஏனைய உழைப்புகள் (மூலதனசெல. ஆக) | - | 06 | கொள்வனவுகள் - மூலதனம் | 6,041 |
| | | | 07 | விரிவாக்கல் கற்கைநெறிகள் தொடர்பிலானசெலவுகள் | 142,333 |
| | | | 08 | ஏனைய செலவினங்கள் பட்டமளிப்புகள் முதலியன | 8,667 |

மனிதவள மேம்பாட்டு நிறுவகம்
கொழும்புப் பல்கலைக்கழகம்
2013 திசெம்பர் 31 இல் நிதி நிலைமைக் கூற்று

| | 2013 | 2012 |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| **நடைமுறையில்லா சொத்துக்கள்** | | |
| ஆதனம் பொறித் தொகுதியும் உபகரணங்களும் | 49,006,665 | 50,295,699 |
| | 49,006,665 | 50,295,699 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| பண்டங்கள்/ இருப்பு | 1,582,625 | 700,541 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 19,308,051 | 6,491,183 |
| முன் கொடுப்பனவுகள் | 141,692 | 69,345 |
| முதலீடுகள் | 101,236,292 | 78,505,488 |
| காசும் காசுக்குச் சம்மானவைகளும் | 41,038,774 | 17,617,875 |
| | 163,307,434 | 103,384,433 |
| **மொத்த சொத்துக்கள்** | 212,314,099 | 153,680,132 |
| **பொறுப்புக்கள்** | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | |
| சென்மதிகள் | 5,470,134 | 5,739,148 |
| அட்டுறு செலவினங்கள் | 23,887,115 | 4,621,207 |
| | 29,357,249 | 10,360,355 |
| **நடைமுறையில்லா பொறுப்புக்கள்** | | |
| சென்மதிகள் | 82,891,571 | 60,201,728 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கம் | 8,688,060 | 8,299,113 |
| ஒத்தி வைக்கப்பட்ட வருமானம் | 50,442,363 | 47,177,837 |
| | 142,021,994 | 115,678,678 |
| | 171,379,243 | 126,039,033 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 40,934,856 | 27,641,099 |
| செலவிடப்படாத மூலதன மானியம் | 7,008,336 | 1,799,761 |
| திரட்டிய நிதியம் | 28,393,047 | 24,974,847 |
| ஒதுக்கங்கள் நன்கொடைகள் | 8,831 | 8,331 |
| | 35,410,214 | 26,782,939 |
| **மட்டுப்படுத்தப்பட்ட நிதி** | | |
| ஐ.எச்.ஆர்.ஏ அபிவிருத்தி நிதி | 5,107,055 | 696,662 |
| காப்புறுதி திட்ட நிதி | 408,586 | 152,500 |
| நன்கொடை நிதி | 9,000 | 9,000 |
| | 5,524,641 | 858,162 |
| **மொத்தத் தேறிய சொத்து/சொத்துரிமம்** | 40,934,855 | 27,641,101 |

..............................
சிரேஷ்ட உதவி நிதியாளர்
மா. மே. நி.

..............................
கலா. ரொஹான் பீ. பெரேரா
பணிப்பாளர்

# மனிதவள மேம்பாட்டு நிறுவகம்
## கொழும்புப் பல்கலைக்கழகம்
### 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று

| | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| செயற்பாட்டு வருமானம் | | | |
| மீண்டும் வரும் மானியம் | | 32,403,000 | 25,260,000 |
| அரச மானியங்களின் கடன் தீரத்தல் - தேய்மானம் | | 5,730,130 | 5,773,850 |
| வருமானம் - ஏனைய வருமானம் | 10 | 165,944,607 | 126,196,511 |
| | | **204,077,737** | **157,230,361** |
| செயற்பாட்டு செலவினங்கள் | | | |
| ஆளணி வேதனங்கள் | 11 | 23,411,434 | 20,832,049 |
| பிரயாணம் | 12 | 34,758 | 113,452 |
| விநியோகங்களும் நுகர்வுகளும் | 13 | 3,674,342 | 1,996,623 |
| பராமரிப்பு | 14 | 1,178,482 | 996,002 |
| ஒப்பந்த சேவைகள் | 15 | 3,029,148 | 3,707,169 |
| ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் | 16 | 4,017,198 | 2,192,157 |
| புணிக்கொடை | 17 | 941,048 | 959,625 |
| தேய்மானம் | 18 | 10,284,191 | 8,271,455 |
| விரிவாக்க நிகழ்ச்சிகள் மீதான செலவினங்கள் | 19 | 142,333,019 | 98,957,425 |
| அகற்றல்களும் பதிவழிப்புகளும் | 20 | | 142,932 |
| **மொத்த செயற்பாட்டு செலவினங்கள்** | | **188,903,620** | **138,168,890** |
| **காலப் பகுதிக்கான தேறிய மிகை/ (பற்றாக்குறை)** | | **15,174,117** | **19,061,471** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. ஈசீ/சீ/ஜஎச்ஆர்ஏ/1/13/எப்ஏ

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2015 சனவரி 31

பணிப்பாளர்,

மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவகம்

**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1979 இன் 11 ஆம் இலக்க மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவக வழிகாட்டியின் 23 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு, 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 1979 இன் 11 ஆம் இலக்க மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவக வழிகாட்டியின் 23 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிறுவகத்தின் பணிப்பாளருக்கு 2014 யூன் 09 ஆம் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரசசட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டுக் நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பூச்சியப் பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்த பயன்பாட்டில் காணப்படுகின்ற ரூபா 2,961,340 கிரயத்திலான 02 மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 11,755,919 ஆன சீராக்கங்கள் பின்னோக்கி மீண்டும் வெளிப்படுத்துவதற்காக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் திரண்ட நிதியத்திற்கு இணக்கம் செய்யப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ரூபா 75,553 கிரயத்திலான மோட்டர் சைக்கிலொன்றும் மிதி வண்டியொன்றும் மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், அச்சொத்துக்களை கைதவிர்த்தமையால் கிடைத்த நலனைக் கணக்கீடு செய்வதற்காக உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளாமல் விற்பனையால் கிடைத்த பணத்தை நானாவித வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

நிறுவகத்தினால் விரிவுரையாளர் ஒருவருக்குச் செலுத்தப்பட்டிருந்த கடன்தொகை 05 ஆண்டுகளுக்குள் அறவிடப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு அறவிடப்படாத மீதி ரூபா 191,000 ஆக இருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிறுவகத்தால் நடாத்தப்பட்ட இரண்டு பாடநெறிகளுக்குரித்தாக அப்பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட திகதிகள், சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பாடநெறிக் கட்டணம் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் களுடனான தொடரபுகள் | இணங்காமை |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 26 ஆம் அத்தியாயம் மற்றும் தாபன வழிகாட்டியின் 06 ஆம் பந்தி | பட்டப்பின் படிப்பு மற்றும் ஏனைய பாடநெறிகளை நடாத்துவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், நடாத்தப்படுகின்ற 14 பட்டப்பின் படிப்பு பாடநெறிகளுக்கும் ஏனைய 114 பாடநெறிகளுக்கும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| | நிதிப் பிரமாணம் 371(2) | (i) செயற்பாடு நிறைவுபெற்ற உடனேயே முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மூன்று உத்தியோகத்தர் களால் 08 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட ரூபா 910,500 தொகையான முற்பணத் தொகையைத் தீர்ப்பதற்காக 14 நாட்கள் முதல் 152 நாட்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தது. |
| | | (ii) 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 218,679 தொகையான முற்பணத் தொகை கணக்காய்வு திகதி வரை தீர்க்கப்படாதிருந்ததுடன், காலம் கடந்திருந்த முற்பணத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு அல்லது அறவிட முடியாமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் 1979 நவம்பர் 13 ஆம் திகதிய 49 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று முறையாக பேணப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தால் 2012 ஆம் ஆண்டிலிருந்து பராமரிக்கப்பட்டிருந்த 04 நிலையான சொத்துக்கள் பதிவேடுகளில் 3 பதிவேடுகள் முறைப்படி பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2004 யூலை 29 ஆம் திகதிய பீஈடீ/25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | பொது முயற்சி நிறுவகங்களில் முதலீடு தொடர்பாக பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ரூபா 28,211,292 ஆன முதலீடு தொடர்பாக அவ்வங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் முற்பணம் வழங்கப்படக்கூடிய எல்லை ரூபா 20,000 ஆக இருந்த போதிலும் குறித்த முற்பணத்தைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தரின் பதவியின் பிரகாரம் அவ்வெல்லை பின்வருமாறு திருத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| உத்தியோகத்தரின் பதவி | முற்பண எல்லை |
|---|---|
| | ரூபா |
| ஒருங்கிணைப்பாளர் | 1,000,000 |
| பிரதி பதிவாளர்/ பிரதி நிதியாளர் | 500,000 |
| சிரேஷ்ட உதவிச் செயலாளர் / சிரேஷ்ட உதவி நிதியாளர் | 300,000 |
| உதவிச் பதிவாளர் / உதவி நிதியாளர் | 250,000 |
| எழுதுனர் - நிரந்தர | 100,000 |

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 15,174,119 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 19,061,471 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,887,352 ஆல் குறைவடைந்தமைக்கு ஊழியர் சம்பளம் ரூபா 2,579,385 ஆலும் வெளிவாரி பாடநெறி செலவினம் ரூபா 3,627,498 ஆலும் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல்

மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் பிரகாரம் நிறுவகத்தால் நடாத்தப்பட்ட 34 பாடநெறிகளில் 06 பாடநெறிகளுக்குரிய பரீட்சை நடாத்தப்பட்டு ஓராண்டு கடந்திருக்கையில் அதன் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு தவறியிருந்தது.

4.2 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்

நிறுவகத்திற்குச் சொந்தமான ரூபா 23 மில்லியனுக்கு அண்மித்த தொகையொன்று வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், அதனை செயற்திறனான நடவடிக்கையொன்றில் ஈடுபடுத்துவது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 வரைவு ஆண்டறிக்கை

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஆ) கணக்கீடு

(இ) நிதி முகாமைத்துவம்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

**கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 108 (02) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (7) (ஏ) ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

| | நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள் | 2015 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும் |
|---|---|---|---|---|
| 2.<br>2.1 | நிதிக்கூற்றுக்கள் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் | இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனித வளங்கள் வலுவூட்டல் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும். | | |

| நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள் | 2015 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும் |
|---|---|---|---|---|
| 2.2<br>2.2.1 | நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்<br>இலங்கை கணக்கீட்டுக் நிதியம் | பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | | (அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பூச்சியப் பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்த பயன்பாட்டில் காணப்படுகின்ற ரூபா 2,961,340 கிரயத்திலான 02 மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | Toyota Echo GD 8862 மோட்டார் வண்டி மற்றும் Toyota Hiace 61 – 8813 வேன் வண்டியை மதிப்பகத் திணைக்களத்தினூடாக மீள் மதிப்பீடு செய்வதற்கு அனுப்பியுள்ளதோடு இதுவரை அந்த அறிக்கை எமக்குக் கிடைக்கவில்லை. | மீள் மதிப்பீட்டு பெறுமதிகள் கணக்குப் பிரிவிற்கு வழங்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் என்பதினால் 2015 இறுதி கணக்குகளில் மீள்மதிப்பீட்டு பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ளது. |
| | | (ஆ) முன்னைய ஆண்டிக்குரிய ரூபா 11,755,919 ஆன சீராக்கங்கள் பின்னோக்கி மீண்டும் வெளிப்படுத்துவதற்காக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் திரண்ட நிதியத்திற்கு இணக்கம் செய்யப்பட்டிருந்தது. | இதில் 2014 ஆம் ஆண்டில் வருமானம் சரியாகக் கணக்கிடப்பட்டுள்ளது. | சரியாக செய்யப்படுகின்றது. |

| நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள் | 2015 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும் |
|---|---|---|---|---|
| 2.2.2 | கணக்கீட்டுக் குறைபாடுகள் | ரூபா 75,533 கிரயத்திலான மோட்டர் சைக்கிளொன்றும் மிதி வண்டியொன்றும் மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், அச்சொத்துக்களை கைதவிர்த்தமையால் கிடைத்த நலனைக் கணக்கீடு செய்வதற்காக உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளாமல் விற்பனையால் கிடைத்த பணத்தை நானாவித வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2014 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு ஜேர்னல் இல (ஜே/எப் 036, 037, 038, 039) திருத்தப்பட்டுள்ளது. | திருத்தப்பட்டுள்ளது. |
| 2.2.3 | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் | நிறுவகத்தினால் விரிவுரையாளர் ஒருவருக்குச் செலுத்தப்பட்டிருந்த கடன்தொகை 05 ஆண்டுகளுக்குள் அறவிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அறவிடப்படாத மீதி ரூபா 191,000 ஆக இருந்தது. | நிறுவனத்தின் விரிவுரையாளராக இருந்து தற்போது வேலைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள திரு வீ.ஜ.டீ.ஜீ. பெரேராவின் கடன்தொகையாக இருப்பதோடு அவருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை இடம்பெறுவதால் அது முடியும் வரை கடன் தொகையை அறவிடுவதில் தாமதம் ஏற்படுகின்றது. | நீதிமன்ற நடவடிக்கை முடியவில்லை. |

| | நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள் | 2015 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும் |
|---|---|---|---|---|
| 2.2.4 | கணக்காய்விற்கான சான்றுகளின்மை | நிறுவகத்தால் நடாத்தப்பட்ட இரண்டு பாடநெறிகளுக்குரித்தாக அப்பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட திகதிகள், சேர்த்துக்கொளள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பாடநெறிக் கட்டணம் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படவில்லை. | உரிய கணக்காய்வு ஆதாரங்களை முன்வைப்பதற்காக உரிய பிரிவிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன. | தேவையான அனைத்து சந்தரப்பங்களிலும் எமது ஒத்துழைப்பு கணக்காய்வு பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் குறைக்கப்படும். |
| 2.3 | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை | மேழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன | | |
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் களுடனான தொடர்புகள்<br>(அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 26 ஆம் அத்தியாயம் மற்றும் தாபன வழிகாட்டியின் 06 ஆம் பந்தி | பட்டப்பின் படிப்பு மற்றும் ஏனைய பாடநெறிகளை நடாத்துவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், நடாத்தப்படுகின்ற 14 பட்டப்பின் படிப்பு பாடநெறிகளக்கும் ஏனைய 114 பாடநெறிகளுக்கும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடங்களில் இந்த நஷ்டத்தைத் தவிர்த்துப் பாடநெறிகளுக்காகத் தேவையான அனுமதியைப் பெற செயற்படுவேன். | அனுமதிபெறப்படுகின்றது. |

| நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள் | 2015 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும் |
|---|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371 (2) | (i) செயற்பாடு நிறைவுபெற்ற உடனேயே முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மூன்று உத்தியோகத்தர்களால் 08 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட ரூபா 910,500 தொகையான முற்பணத் தொகையைத் தீர்ப்பதற்காக 14 நாட்கள் முதல் 152 நாட்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தது. | உரிய நேரத்தில் பற்றுச்சீட்டுக்கள் கிடைக்காமையினால் இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளதோடு, 2014 ஏப்ரல் மாதம் 23 இலிருந்து இரண்டு வாரத்திற்குள் முற்பணத்தை ஈடு செய்யுமாறு முற்பணம் பெறும் அனைத்த அதிகாரிகளுக்கும் எழுத்த மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | முற்பணம் தீர்ப்பது நல்ல நிலையில் உள்ளது. |
| | (ii) 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 218,679 தொகையான முற்பணத் தொகை கணக்காய்வு திகதி வரை தீர்க்கப்படாதிருந்ததுடன், காலம் கடந்திருந்த முற்பணத்தை இனங்கண்டு அறவிடுவதற்கு அல்லது அறவிட முடியாமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2000 ஆம் ஆண்டிற்கு முன் பெற்றள்ள போதிலும் இனங்கான முடியாத ரூ. 197,829 முற்பணத்தை கைவிடுவதற்காக கல்விசார் குழுவின் கணக்காய்வுக் குழுவிற்குச் சமர்ப்பித்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது. | நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. |

| நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள் | 2015 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும் |
|---|---|---|---|
| | | 2006 இல் நூலக ஜேர்னல் பெறுவதற்காகப் பெற்ற ரூ.20,850 முற்பணத்திற்காக உரிய நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் இதுவரை சிறந்த பதில் கிடைக்கவில்லை. இந்த ஜேர்னல்கள் கிடைக்கும் சாத்தியம் குறைவாக இருப்பதால் அதைக் கணக்கிலிருந்து கைவிடுவதற்கு இவ்வாண்டில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் 1979 நவம்பர் 13 ஆம் திகதிய 49 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று முறையாக பேணப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தால் 2012 ஆம் ஆண்டிலிருந்து பராமரிக்கப்பட்டிருந்த 04 நிலையான சொத்துக்கள் பதிவேடுகளில் 3 பதிவேடுகள் முறைப்படி பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிரந்தர சொத்து டாப்பு தற்போதுள்ள நிதி மற்றும் நிர்வாக சட்டங்களுக்கமைய தயாரிக்கப்படுவதோடு புதிய டாப்பு கிடைத்த பின்பு முறையாக நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். | முறையாக செய்யப்படுகின்றது. |

| நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள் | 2015 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும் |
|---|---|---|---|
| (ஈ) 2004 யூலை 29 ஆம் திகதிய பீஈடி/25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | பொது முயற்சி நிறுவகங்களில் முதலீடு தொடர்பாக பொதுக் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ரூபா 28,211,292 ஆன மதலீடு தொடர்பாக அவ்வங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்கை. | 2014 ஆம் ஆண்டில் உரிய அனுமதி பெறப்பட்டுள்ளது. | அனுமதிபெறப்பட்டுள்ளது. |
| 2.4 போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் முற்பணம் வழங்கப்படக்கூடிய எல்லை ரூபா 20,000 ஆக இருந்த போதிலும் குறித்த முற்பணத்தைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தரின் பதவியின் பிரகாரம் அவ்வெல்லை பின்வருமாறு திருத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>**உத்தியோகத்தரின் பதவி** — **முற்பண எல்லை (ரூபா)**<br>ஒருங்கிணைப்பாளர் — 1,000,000<br>பிரதி பதிவாளர்/ பிரதி நிதியாளர் — 500,000<br>சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ சிரேஷ்ட உதவிப் நிதியாளர் — 300,000<br>உதவிப் பதிவாளர்/ உதவிப் நிதியாளர் — 250,000<br>எழுதுனர் - நிரந்தர — 100,000 | நிதிப்பிரமானம் 371 இற்கமைய முற்பணத்தின் வரையறை ரூ. 20,000 என்ற போதிலும் செயலமர்வுகள், திட்டங்கள் மற்றும் நேர்முகப் பரீட்சைகளைச் சிறப்பாக நடாத்திச் செல்வதற்காக (முக்கியமாக போதனாசிரியர்கள் மற்றும் ஹோட்டல்களுக்கு செலுத்துவதற்காக) அதிக முற்பண வரையறைகளை வைத்துக்கொள்வது அவசியமாகும். தற்போது வழங்கப்படும் உச்ச முற்பண வரையறை ரூ. 2 இலட்சம் (ரூ.200,000) வரை குறைக்கப்பட்டுள்ளதோடு இதைக் கணக்காய்வுக் குழுவிலும் கலந்துரையாடி சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. | இந்த வரையறைகளை மாற்றி முற்பண எல்லை ரூ.100,000 வரை குறைக்கப்பட்டுள்ளது. |

| நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள் | 2015 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும் |
|---|---|---|---|
| 3 நிதி மீளாய்வு<br>3.1 நிதி விளைவுகள் | சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 15,174,119 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 19,061,471 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,887,352 ஆல் குறைவடைந்தமைக்கு ஊழியர் சம்பளம் ரூபா 2,579,385 ஆலும் வெளிவாரி பாடநெறி செலவினம் ரூபா 3,627,498 ஆலும் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தன. | இணங்குகின்றது. | இணங்குகின்றது. |
| 4 செயற்பாட்டு மீளாய்வு<br>4.1 செயலாற்றல்<br><br>பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் | மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் பிரகாரம் நிறுவகத்தால் நடாத்தப்பட்ட 34 பாடநெறிகளில் 06 பாடநெறிகளுக்குரிய பரீட்சை நடாத்தப்பட்டு ஓராண்டு கடாந்திருக்கையில் அதன் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு தவறியிருந்தது. | சர்வதேச வியாபாரத்தில் டிப்ளோமா- இல. 04 (1 வது கல்வித் தவணை) மற்றும் (2 வது கல்வித் தவணை) பெறுபேறு 2014 ஆகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.<br>சுகாதார மேம்பாட்டில் டிப்ளோமா - இல. 04 (1 வது கல்வித் தவணை)மற்றும் (2 வது கல்வித் தவணை) பெறுபேறு 2015 பெப்ருவரி மாதம் 12 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.<br>புவித் தகவலியலில் விஞ்ஞான முதுமாணி (2010/2011) இல. 01 பீ (3 வது கல்வித் தவணை) பெறுபேறு 2015 ஏப்ரில் மாதம் 7 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. | பெறுபேறு வெளியிடப்பட்டுள்ளது. |

| நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள் | 2015 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும் |
|---|---|---|---|
| 4.2 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள் | நிறுவகத்திற்குச் சொந்தமான ரூபா 23 மிலியனுக்கு அண்மித்த தொகையொன்று வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், அதனை செயற்திறனான நடவடிக்கையொன்றில் ஈடுபடுத்துவது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | உங்கள் இந்தக் கணக்காய்வுத் தீர்மானத்திற்கமைய நிதி முகாமைத்துவத்தை முறையாக நடாத்திச் செல்லவும் மேலதிக நிதியை வைப்பிலிடவும் உரிய அனுமதிக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான நிதியை வைத்துக்கொண்டு மேலதிக நிதியை முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்<br>5.1 வரைவு ஆண்டறிக்கை | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த சட்ட வரைவு அறிக்கையின் பிரதியொன்றை மிக விரைவில் உங்களுக்குச் சமர்ப்பிப்பேன். | முறையாக நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. |
| 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான துறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது. | | |

| நிதிக் கூற்று தொடர்பிலான தாக்கம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கருத்துரைகள் | 2015 வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமையும் முன்னேற்றமும் |
|---|---|---|---|
| | (அ) சொத்துக்கள் முகாமைத்துவம் | 2016 ஆம் ஆண்டிலிருந்து தேவையான சட்டப் பிரமாணங்கள் மற்றும் உங்கள் முடிவிற்கமைய சொத்துக்களை முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | முறையாக செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| | (ஆ) கணக்கீடு | உரிய பிரிவுகளால் வழங்கப்படும் விடயங்களை உபயோகித்து முடிவுகளுக்கமைய முடிந்தவரை அதிகளவில் கணக்கு வைக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | முறையாக செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| | (இ) நிதி முகாமைத்துவம் | உங்கள் கணக்காய்வு முடிவுகளுக்கமைய நிதி முகாமைத்துளத்தை முறையாக நடாத்திச் செல்வதற்கும் மேலதிக நிதியை வைப்பிலிடவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | முறையாக செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. |